அன்பார்ந்தவர்களே !

தங்களை இக்கையேட்டின் வழியாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். இம்மகிழ்வோடு, தங்களை தேடிவந்து சந்திப்பதன் நோக்கம் இதுதான் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம். நாம் ஒரே மண்னை தாயகமாகவும், ஒரே மொழியை தாய் மொழியாகவும் கொண்டவர்களாக வாழ்ந்து வருகிறோம். இதில் நாம் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொள்வதும், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதும் நமது சமுதாய ஒற்றுமைக்கு வளம் சேர்க்கும் என உறுதியாக நம்புகிறோம்.

உலகில் வாழும் ஒவ்வொருவரும் மொழி, இனம், மதம், கலாச்சாரம் இப்படி எண்ணற்ற விசயங்களில் தங்களுக்கென ஓர் தனியான வாழ்க்கை முறையை பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் நம்மில் பெரும்பாலோர் தங்களைச்சுற்றி வாழ்கின்ற பிற சமுதாய மக்களைப்பற்றி அறிந்து கொள்ளாமலும், அவர்களைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வமில்லாமலும், இன்னும் நமது பக்கத்து வீட்டில் வாழ்பவர்களைப் பற்றிக்கூட அறிமுகமில்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது.

இதனால் ஒரு சமூகம் பிற சமூக மக்களைப்பற்றி தப்பும் தவறுமாக விளங்கிக்கொள்வதும், டிவி-பத்திரிக்கை-சமூக வலைதளங்களில் என்ன சொல்லப்படுகிறதோ, அதையே உண்மை என நம்பி, தன்னோடு வாழும் பிற மனிதர்களை எவ்வித அறிமுகமும் இன்றி, தவறாக நினைப்பதும், எதிரிகளைப்போல் பார்ப்பதும், அவர்களுக்கு எதிராக செயல்படுவதும் நாம் அன்றாடம் காணக்கூடிய நிகழ்வுகள் என்பதை நம்மில் யாராலும் மறுக்க முடியாது.

இன்றைய இத்தகைய சூழ்நிலையில் பொதுவாக இஸ்லாமிய மார்க்கத்தைப் பற்றியும், இஸ்லாமியர்களைப் பற்றியும் மிக மோசமான முறையில் " முஸ்லிம்கள் - இரக்கமில்லாதவர்கள், தீவிரவாதிகள், தேசப்பற்றில்லாதவர்கள், சட்டத்தை மதிக்காதவர்கள் " இப்படியெல்லாம் எண்ணற்ற பொய்-புரட்டுகளையும், கட்டுக்கதைகளையும் மீடியாக்கள் தங்களின் சுயலாபங்களுக்காக பரப்புரை செய்வதை காணமுடிகிறது. இத்தகைய சுயநல விஷமிகளின் சதிகளால் மனித சமுதாயத்தின் ஒற்றுமை பாதிப்புக்குள்ளாவதும், மனிதர்கள் ஒருவருக்கொருவர் தாக்கி அழித்துக் கொள்வதும் சாதாரண நிகழ்வாக நம் சமுதாயத்தில் உள்ளது

இவையெல்லாம் உண்மைதானா ? இதற்கான ஆதாரங்கள் ஏதேனும் உண்டா ? இவற்றை எப்படி நம்புவது ? என யோசிக்காமல் அப்படியே நம்பக்கூடியவர்கள்தான் நம்மில் பெரும்பாலோர். இத்தகைய கொடிய சூழ்நிலையிலிருந்து இம்மனித சமுதாயத்தைக் காப்பதும், அனைவரும் அமைதியுடன் வாழ்வதை உறுதிப்படுத்துவதும் நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

இதனடிப்படையில் முஸ்லிம்களைப் பற்றியும், இஸ்லாத்தைப் பற்றியும் எவ்வித கலப்புமின்றி, உள்ளது உள்ளபடி தங்களுக்கு எடுத்துரைப்பது எமது கடமையாகும். அதுமட்டுமின்றி, முஸ்லிம்களைப்பற்றிய தங்களின் எண்ண ஓட்டங்களை பகிர்ந்து கொள்வதற்கும், இஸ்லாமிய மார்க்கத்தைப்பற்றிய தங்களின் சந்தேகங்களை கேள்வியாக கேட்டு, தெளிவுபடுத்திக் கொள்வதற்கும் எமக்கு கிடைக்கும் ஒரு வாய்ப்பாகவும் இச்சந்திப்பை பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறோம்.

மேலும் இந்தியாவில் இஸ்லாமிய வரலாறு எப்படிப்பட்டது, இஸ்லாம் தீவிரவாதத்தைப் போதிக்கிறதா, இஸ்லாமியர்களின் வேதமான குர்ஆன் மனிதர்களோடு என்ன பேசுகிறது இதுபோன்ற இஸ்லாத்தைப்பற்றிய தங்களின் அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கும் முதல் படியாக இச்சந்திப்பு இருக்கும் என நம்புகிறோம்.

### இஸ்லாம் தீவிரவாதத்தை போதிக்கிறதா ?

உலகத்தின் மனிதன் உருவான நாளிலிருந்து, நாகரீக வளர்ச்சியை முழுமையாக எட்டிவிட்டதாக கூறும் இன்றுவரை எல்லாக்காலங்களிலும், உணவு, இருப்பிடம், வாழ்வாதாரங்கள், மொழி, இனம், மதம், நாடு இப்படி எல்லாவகையிலும் மனித இனம் ஒருவருக்கொருவரை அழித்துக்கொள்வ்தும், அடிமைப்படுத்துவதும் நடந்துகொண்டேதான் இருக்கிறது. இத்தகைய தீவிரவாதம் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு மதத்திற்கோ, இனத்திற்கோ, நாட்டினருக்கோ சொந்தமானதல்ல.

உதாரணமாக உலகில் அதிகமாக மனித இனத்தை கொன்றொழித்த ஹிட்லர் இஸ்லாமியரல்ல. இனத்தில் பெயரால் நமது அண்டை நாடுகளான மியான்மர், இலங்கை போன்ற நாடுகளில் நடக்கும் தீவிரவாத தாக்குதலுக்கும், கொலை-கொள்ளை சம்பவங்களுக்கும் காரணம் யாரென்பதை உலகறியும். இவற்றில் முஸ்லிம்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. நம் இந்திய நாடு தீவிரவாதிகளாக அறிவித்துள்ள மாவோயிஸ்டுகள் முஸ்லிம்கள் அல்ல. இந்திய அரசியலில் மகாத்மா காந்தி - இந்திரா காந்தி - ராஜீவ் காந்தி இப்படி எண்ணற்ற தலைவர்களை கொன்றவர்கள் முஸ்லிம்கள் அல்ல. முஸ்லிம்கள்மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட ஊடகங்களும், அரசியல் கட்சிகளும் தான் இத்தகைய கீழ்த்தரமான செய்திகளை தங்களின் சுய அரசியல் லாபங்களுக்காக பரப்புகின்றனரே தவிர இதில் எவ்வித உண்மையும் இல்லை.

உலகில் மனிதன் எங்கெல்லாம் வாழ்கிறானோ அங்கெல்லாம் ஏதேனும் சில காரணங்களுக்காக தீவிரவாதம் தலை தூக்குகிறது. இதற்கு குறிப்பிட்ட ஒரு மதத்தினரை மட்டும் குற்றம் சுமத்துவது அறிவுடைய செயலாக இருக்க முடியாது. தீவிரவாதம் எந்த வடிவில் வந்தாலும் அதை நாம் ஒவ்வொருவரும் எதிர்க்க வேண்டும். தீவிரவாதத்தை இஸ்லாம் முற்றுமுழுதாக எதிர்க்கின்றது. " யார் ஒரு உயிரைக் காரணமின்றை கொல்கிறாரோ, அவர் உலக உயிர்கள் அனைத்தையும் கொன்றவர் ஆவார்" யார் ஒருவர் ஓர் உயிரை வாழ வைக்கிறாரோ, அவர் உலக உயிர்கள் அனைத்தையும் வாழவைத்தவர் ஆவார்" என்று இறைமறையான குர்ஆன் சொல்கிறது. இந்நிலையில் ஒரு முஸ்லிம் எப்படி தீவிரவாதியாக இருக்க முடியும். எனவே, தீவிரவாதத்திற்கு இஸ்லாத்தில் எள்முனையளவும் இடமில்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

### இந்திய வரலாற்றில் முஸ்லிம்களின் ஆட்சிமுறை

இன்னும் தெளிவாக சொல்வதென்றால் இந்திய வரலாற்றில் முஸ்லிம்களின் ஆட்சிமுறை பொற்காலம் என கருதப்படுகிறது. கிபி 1193 முதல் 1837 வரை சுமார் 640 ஆண்டுகள் முஸ்லிம்கள் இந்தியாவை ஆட்சி செய்தார்கள். இக்காலங்களின் எந்த வழிபாட்டுத்தளங்களும் இடிக்கப்பட்டதாக வரலாறு கிடையாது. அதிகமான இந்துமத ஆலயங்களும், கோவில்களும், மடங்களும் கட்டப்பட்டது முகலாயர்களின் ஆட்சியில் தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்தியாவின் இன்றைய பாராளுமன்ற கட்டிடம் முதல் அரசாட்சிக்காக உபயோகப்படுததப்படும் பெரும்பாலான கட்டிடங்கள் முகலாய முஸ்லிம் ஆட்சியில் கட்டப்பட்டவைதான் என்பதை நினைவில் பதியவைத்துக் கொள்ளவேண்டியது நமது கடமையாகும். இன்றைய இந்தியாவின் ஆட்சிமுறையின் அடித்தளமே முஸ்லிம்கள் கட்டியமைத்ததுதான். இதை உலக வரலாற்றாசிரியர்கள் பறைசாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

சிதறிக்கிடந்த பல்வேறு நிலப்பரப்பை ஒன்றுபடுத்தி இந்தியா எனும் நாட்டை உருவாக்கி 640 ஆண்டுகள் ஆட்சி செய்த முஸ்லிம் சமுதாயம், பிற சமுதாயங்களின் வழிபாட்டு உரிமையிலோ, வாழ்வாதார உரிமையிலோ கைவைத்ததில்லை. மாறாக, அனைத்து சமூக மக்களையும் ஒருமுகப்படுத்தி, ஒற்றுமையோடும், ஒருமைப்பாட்டுடனும் ஆட்சி செய்த சமூகம்தான் இந்தியாவின் இஸ்லாமிய சமுதாயம். இவர்களை தீவிரவாதிகள் என்றோ, மதமாற்றத்தை தூண்டுகிறார்கள் என்றோ, எப்படி குற்றம் சுமத்தமுடியும்.

### சமத்துவத்தை போதிக்கும் மார்க்கம்

இஸ்லாம் என்பது சமத்துவத்தை வலியுறுத்தும் மார்க்கமாகும். குர்ஆன் உலக மனிதர்களைப்பார்த்து எப்படி அழைக்கிறது தெரியுமா ? இதோ..

> ***மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்;. பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி***

*உலகில்) பரவச் செய்தான்;. ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்;. அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்;. மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்). - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (அத்தியாயம் 4 - வசனம் 1 )*

*மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். ( அத்தியாயம் 49 - வசனம் 13 )*

இதுமட்டுமின்றி மனித இனத்திற்கான இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபியவர்கள் தனது இறுதிப் பேருரையில் சொன்ன செய்தி என்ன தெரியுமா ?

*மக்களே! அறிந்து கொள்ளுங்கள். உங்கள் இறைவன் ஒருவனே. உங்கள் தந்தையும் ஒருவரே. இறையச்சத்தைத் தவிர வேறெந்த வகையிலும் ஓர் அரபியருக்கு அரபி அல்லாதவரை விட, ஓர் அரபி அல்லாதவருக்கு அரபியரை விட, ஒரு வெள்ளையருக்கு கருப்பரை விட, ஒரு கருப்பருக்கு வெள்ளையரை விட எவ்விதச் சிறப்பும் மேன்மையும் இல்லை. உங்கள் இறைவனை அதிவிரைவில் நீங்கள் சந்திப்பீர்கள். அவன் உங்கள் செயல்களைப் பற்றி உங்களிடம் விசாரணை செய்வான். நீங்கள் உங்களுக்குள் கொலை குற்றம் புரிந்து வழிகேடர்களாக மாறிட வேண்டாம்.*

இப்படி அனைத்து மக்களையும் சமத்துவத்தோடும் சகோதரத்துவத்தோடும் அணுகும் மார்க்கம்தான் இஸ்லாம். அதை முழுமையாக கடைபிடிப்பவர்கள்தான் "முஸ்லிம்கள்" இப்படிப்பட்ட முஸ்லிம்கள், **இறைவனை ஏன் "அல்லாஹ்" என்று அழைக்கிறார்கள் ?**

ஒவ்வொரு மதத்தினரும் தங்களின் கடவுளை தங்களது மொழியில் கடவுள்-பகவான்-கர்த்தர்-ஆண்டவன் இப்படி பல பெயர்களில் அழைக்கின்றனர். இஸ்லாமியர்கள் மட்டும் ஏன் தங்கள் இறைவனை "அல்லாஹ்" என்ற வார்த்தையில் அழைக்கிறார்கள் என நீங்கள் கேள்வி எழுப்பலாம்.

முஸ்லிம்கள் தங்களது இறைவனது வேதமாக " குர்ஆனை" ஏற்றுக்கொண்டவர்கள். அத்தகைய இறைவனது வேதமான குர்ஆனில் இறைவன் தன்னை " அல்லாஹ்" என்ற பெயரிலேயே அழைக்கிறான். எனவே இறைவன் தனது வேதத்தில் தனக்கு என்ன பெயரை வைத்து அழைக்கிறானோ அதையே, முஸ்லிம்களும் ஏற்றுக்கொண்டு தங்களது இறைவனை " அல்லாஹ்" என்று அழைக்கின்றனர். அரபு மொழியில் " அல்லாஹ்" என்ற சொல்லுக்கு இறைவன் என்பது பொருளாகும். அரபி மொழி பேசக்கூடியவர் அவர் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அவர் தனது இறைவனை "அல்லாஹ்" என்ற சொல்லைக்கொண்டே அழைக்கமுடியும். எனவே, “அல்லாஹ்” என்று இறைவனை அழைப்பது முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்பதை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

*இன்னும் வானங்களிலும் பூமியிலும் அவனே (ஏக நாயனாகிய) அல்லாஹ்; உங்கள் இரகசியத்தையும், உங்கள் பரகசியத்தையும் அவன் அறிவான்; இன்னும் நீங்கள் (நன்மையோ தீமையோ) சம்பாதிப்பதை எல்லாம் அவன் அறிவான். (அத்தியாயம் 6 - வசனம் 3)*

எனவே, அன்பானவர்களே ! இந்த மனித சமுதாயம் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும், மகிழ்வுடனும் வாழ்ந்திட நாம் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதும், வாழ்வின் நேரான வழி எது என்பதை சிந்தித்து அறிவதும், நம் அனைவரையும் படைத்த ஏக இறைவனை அறிந்துகொள்வதும் கட்டாய கடமையாகும். இதன் காரணமாகவே தங்களை இஸ்லாத்தைப்பற்றியும், முஸ்லிம்களைப்பற்றியும், நம்மைப்படைத்த இறைவனைப்பற்றியும், அவனது தூதர்களைப்பற்றியும், அவனது வேதங்களைப்பற்றியும் முழுமையாக அறிந்துகொள்ள தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

நாம் அனைவருக்கும் நேர்வழி வழங்க ஏக இறைவனே போதுமானவன். அவன் எப்படிப்பட்டவன் என்றால் ....

*(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. (1) அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். (2) அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை. (3) அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (4) ( அத்தியாயம் 112 - வசனம் 1-4 )*

---

ஆக்கம் : மதுரை நிஸார்

---

இஸ்லாத்தைப்பற்றி அறிந்துகொள்ள, இஸ்லாம் தொடர்பான வெளியீடுகள், மற்றும் குர்ஆன் தமிழாக்கம் இலவசமாக பெற்றிட தொடர்பு கொள்க:

**WHITE WAY COMMUNICATIONS**

MADURAI - INDIA

Contact : qfreeissue@gmai.com

Mobile: 050 823 4583 (KSA)

WWW.SUVANACHOLAI.COM

# உன்னை நான் சந்தித்தேன்

WWW.SUVANACHOLAI.COM